# ஆத்ம ஜோதி.



'புண்ணியன் சுத்தானந்தன் பொன்முகத்தைக் கண்டார்க்குப்
பண்ணியபா வர் போம் பறந்து.'


| சோதி 1. | விரோதி௵ சித்திரைமீ | சுடர் 6 |
|---|---|---|

# ஆத்ம ஜோதி.

## பொருளடக்கம்.


| | விஷயம் | பக்கம் |
|---|---|---|
| 1 | சுத்தானந்தர் வாழ்த்து | 153 |
| 2 | புதுவைத்தவயோகி வாழ்க | 154 |
| 3 | எமது ஆலயங்களிலுள்ள ஊழல்கள் | 155 |
| 4 | இறை அருள் மணக்கும் இடங்கள் | 159 |
| 5 | சாதனை வாரத்தைப்பற்றி பாலயோகி ஸ்ரீ இராமதாஸ் தந்துள்ள விளக்கம் | 160 |
| 6 | சிவகங்கையில் எழுந்த செந்தமிழ் வாணி | 161 |
| 7 | அருணையில் குருவையடைந்த அற்புதக் காட்சி | 163 |
| 8 | கோயில் சீர்திருத்தம் | 166 |
| 9 | புதுவையில் பூரணயோகி தரிசனம் | 168 |
| 10 | நான்கண்ட சர்வாத்ம சமத்துவம் | 170 |
| 11 | முத்தமிழ்வளர்க்கும் முனிவன் | 171 |
| 12 | மதமற்ற மார்க்கம் | 172 |
| 13 | பாரத சக்தி | 173 |
| 14 | அமைதி | 176 |
| 15 | அவதார புருஷர்களது........ஜீவியசரிதைகள் | 179 |
| 16 | ஷெல்லியும் சுத்தானந்தரும் | 182 |
| 17 | திருக்கேதீஸ்வர ஆலயத்திருப்பணிச்சபை | 184 |



ஆத்ம ஜோதி ஓர் ஆத்மீக மாத வெளியீடு

கௌரவ ஆசிரியர்: திரு. க. இராமச்சந்திரன்

சந்தா விபரம்:

ஒருவருடம் ரூ. 3/- ஆயுள் சந்தா ரூ. 75/- தனிப்பிரதி ச. 30.

நா. முத்தையா,

"ஆத்ம ஜோதி" நிலையம், நாவலப்பிட்டி. (சிலோன்)



ஓம்

# ஆத்ம ஜோதி.

"தானுநிறைவுற்றுத்தன்னவருமின்புறுதற்
கானவொழுக்காறேயறம்."

—சுத்தானந்தர்

சோதி: 1 | விரோதி௵ சித்திரைமீ, | சுடர் 6


## சுத்தானந்தர் வாழ்த்து.

வாழ்க சுத்தானந்தன்! வாழ்க சுத்தசக்தி
வாழ்க வரகவியே
வாழ்க மஹாயோகி! வாழ்க மஹாதியாகி!
வாழ்க தமிழ்மணியே! (வாழ்க)

அருணை ரமணேசன் கருணைக் கிலக்கான
அற்புத மோனியவன்
அரவிந்தத் தேனுண்டு ஆனந்தம் பொங்கிய
ஆவேச வாணியவன் (வாழ்க)

ஐயைந்து ஆண்டினுள் அந்நிய மொழியெல்லாம்
ஆர்வமுடன் கற்றான்
ஆரியம் போலவே ஆங்கிலந் தன்னிலும்
அளவில் புலமைபெற்றான் (வாழ்க)

எந்தாய் மொழிக்கிணை எங்குமே யில்லையென்
றெடுத்து விளக்கியுள்ளான்—அதில்
எண்ணரிய நூல்கள் இயற்றிப் புகழ்நமக்
கேற்றிய ஏந்தலவன் (வாழ்க)

பாரத சக்தி யெனும்மஹா காவியம்
பாடி யெமக்களித்தான்—அதைப்
படித்துத் தமிழர்கள் பண்புற்று வீரராய்ப்
பாரினில் வாழ்ந்திடவே. (வாழ்க)

—க. இ.

## புதுவைத் தவயோகி வாழ்க.

கொண்டல் வண்ணா! கோபாலா!
கும்பிட்டுன்னை வேண்டுகின்றேன்;
அண்டு மன்பால் தமி;ழன்னைக் (கு)
அல்லும் பகலும் அலுப்பின்றித்
தொண்டு செய்யும் தவயோகி
சுத்தா னந்த பாரதியிம்
மண்டலத்தில் என்றென்றும்
வாழ வரம் நீ வழங்குவையே!

—கவிமணி. தேசிகவிநாயகம்பிள்ளை

இந்துமதம் விஞ்ஞானம்
இன்பமுறும் யோகவித்தை
பைந்தமிழிற் கொணர்ந்திடுவீர்
பலகலைகள் தினந்தோறும்;
வந்தனங்கள்! வாய்மையிலே
வளர்கின்ற கவிமுனியே!
அந்தமிலாப் பெரும்புகழை
அடைந்திட்டீர் அவனியிலே!

—டி. வி. சுவாமிநாதன்

முத்தமிழும் வல்ல முனிவன்சுத் தானந்தன்
சித்தத்திற் கொண்டான் சிவம்.

பத்தாயிர மணியாம் பாரத சக்தியெனும்
புத்தாரஞ் செய்தானைப் போற்று,

தமிழின்ப வூற்றென்று தாரணியி லுண்டேல்
அமிழ்தக் கவியோகி யாம்

வாழிசுத் தானந்த மாமுனிவன் வண்டமிழில்
ஆழிபோல் நூல்கள் அளித்து!

வாழி தவமுனிவன்! வாழி நவமுனிவன்!
வாழிகவி யோகி வளர்ந்து!

—காளத்திநாதப்புலவர்.

## எமது ஆலயங்களிலுள்ள ஊழல்கள்.

(ஆசிரியர்)

மக்களிடத்துள்ள பேராசை, பொறாமை, பொய், சினம், வஞ்சகம் முதலாம் விலங்குக்குணங்களை நீக்கி, அவ்விடத்தில் அன்பு, அருள், பொறுமை, தியாகம், தூய்மை ஆகிய தெய்வசம்பத்துக்களை நிலவச்செய்து, அவர்களைக்கடவுள் நெறியில் நிறுத்தும் மார்க்கம் சமயமென அழைக்கப்படும். மனிதன் வெறுஞ் சோற்றுத்துருத்தியல்ல; பிறந்துவளர்ந்து, உண்டு உடுத்து, உறங்கி எழுந்து, இனத்தைப்பெருக்கி மடிவதோடு மனிதப்பிறவியின் நோக்கம் முடிவடைவதில்லை. மரணத்தின் பின்னரும் வாழ்வு உண்டு என்ற உண்மையை நமக்கு விளக்குவது சமயம். இந்தச் சமய நெறியின் துணைக்கருவிகளாகவே ஆலயங்களும் ஏனைய வழிபாட்டு முறைகளுந்தோன்றின. ஆகமவிதிப்படி கட்டப்பட்ட ஒவ்வொரு இந்துமதக்கோயில் அமைப்பிலும், மனிதனின் தூல, சூக்கும, காரணசரீரங்களும், அன்னமய, பிராணமய, மனோமய, விஞ்ஞானமய, ஆனந்தமயமாகிய பஞ்சகோசங்களும் அடங்கியுள்ளன. இவற்றையெல்லாங்கடந்த நிலையிலேயே கடவுட்காட்சியைப் பெறமுடியும் என்பதே இந்த அமைப்பிலடங்கியுள்ள தத்துவம். ஆலயம் என்றால் ஆன்மா ஆண்டவனிடம் படியும் இடம் அல்லது ஆணவமல நீக்கத்திற்குப் பயன்படும் இடம் என்பதேகருத்து.

எங்கள் ஆன்றோர்களின் கொள்கைப்படி, கோயிலில்லாத கிராமம் குடியிருப்புக்குதவாத இடமாகக் கருதப்பட்டது. ஏனெனில், கோயில்கள் மக்களின் சமயப்பற்றின் சின்னங்களாக அமைவதோடு நின்றுவிடாது, அவர்களின் சமுதாயவாழ்க்கையிலும் பொருளாதாரத் துறையிலுங்கூட நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தன. கோயில்களைச் சேர்ந்த தருமச்சொத்துக்கள் பூசைக்கு மாத்திரம் பிரயோசனப்படவில்லை; சமரஸ சாஸ்திர அறிவு பரவுதற்கும், கலைவளர்ச்சிக்கும், தேவார திருவாசகம் திருவாய் மொழி போன்ற துதிப்பாடல்களைப் பண்ணுடனும் பக்தியுடனும் பாடப்பயிற்றுவதற்கும், புராணப்படனங்கள் செய்விப்பதற்கும் அச்சொத்துக்களின் வருமானம் பயன்படுத்தப்பட்டது. இக்காரணங்களைக்கொண்டே,

'ஆலயந் தொழுவது சாலவும் நன்று', 'கோயிலில்லாத ஊரில் குடியிருக்கவேண்டாம்,' என்பன போன்ற அரும்வாக்குகள் தோன்றின.

இங்ஙனம் எங்கள் சாதியினரின் தூயபண்புப்பாட்டின் உறைவிடமாகத் தோன்றி, அவர்களின் சமரஸ நெறியிலும், சமுதாய வாழ்க்கையிலும், கல்வித்துறையிலும் மேன்மையுற்று விளங்கிய கோயில்களின் தற்போதைய கேவலநிலையைப் பார்த்து எந்த இந்து தான் வெட்கித்தலை குனியாதிருக்க முடியும்? "என் வீடு சகலசாதியாருக்கும் ஜெபவீடு எனப்படும் என்று எழுதியிருக்கவில்லையா? நீங்களோ அதைக்கள்ளர் குகையாக்கி விட்டீர்கள்!,, என்று ஈராயிரம் வருஷங்கட்கு முன் ஏசுபிரான் கூறிய கண்டனம் இன்றும் பொருத்தமாகவே யுள்ளதன்றோ? 'மணியொலிகேட்டேன்! வாத்தியங்கேட்டேன்! கோபுரங்கண்டேன்! கோயிலென்றோடினேன்!' என ஆரம்பிக்கும் முன்னேற்றப் பாடலில் யோகி ஸ்ரீசுத்தானந்தர்,

'பணத்தைக்கண்டேன்; பத்தியைக்காணேன்.
சடங்குகள் கண்டேன்; சத்தியங்காணேன்.
சாதியைக்கண்டேன்; சாமியைக்காணேன்.
குருக்களைக்கண்டேன்; கோயிலைக்காணேன்.
எங்கே கோயில்? எங்கே சாமி? '

என்று நமது கோயில்களை இன்று சூழ்ந்துள்ள ஊழல்களைத்தெட்டத் தெளிவாக விளக்குகிறார். இவற்றின் காரணங்களை ஆராய்வோமாயின்,

(1) நாடு தன்னரசை இழந்தது. (2) பிறப்பில் உயர்வு தாழ்வு பாராட்டுதலிலிருந்து தோன்றிய சாதிக்கொடுமை. (3) கல்வியறிவற்ற, ஒழுக்கமற்ற தன்னலமுற்ற மனிதர் கோயில் அதிகாரிகளானது. (4) சமய சாஸ்திரந் தெரியாத, பண்பற்ற, பக்தியற்ற, சீலமற்ற புரோகிதர்கள் கோயில்களில் அர்ச்சகர்களானது, ஆகிய நான்குமே முக்கியமானவையாகும். இந்த நான்கனுள் இறுதியில் குறிப்பிட்ட ஒன்றுமே ஒரு நாட்டுக்கும் சமுதாயத்திற்கும் பலதொல்லைகளை விளைக்கக்கூடியதென திருமூலர் கீழ்க்கண்ட திருமந்திரத்தால் நன்கு விளக்கியுள்ளார்:—



பேர்கொண்ட பார்ப்பான் பிரான்தன்னை அர்ச்சித்தாற்
போர்கொண்ட வேந்தர்க்குப் பொல்லா வியாதியாம்
பார்கொண்ட நாட்டுக்குப் பஞ்சமுமாம் என்றே
சீர்கொண்ட நந்திதெரிந் துரைத்தானே.

மேலே கூறப்பட்ட முதலாவது காரணமான நாட்டின் அடிமைத்தனம் நீங்கியதும் ஆலயங்களை அலங்கோலமாக்கிய ஊழல்கள் இருந்தவிடந்தெரியாமல் மறையவேண்டியதே முறையாகும். தென்இந்தியாவைப் பொறுத்தமட்டில், சென்ற இரண்டாண்டுக்குள் நிறைவேறிய சீர்திருத்தங்கள் எடுத்துக்காட்டாயுள்ளன. 1947–ம் ஆண்டில் கொண்டுவரப்பட்ட கோயில் நுழைவு அனுமதிச்சட்டம் சாதிக்கொடுமையையும் தீண்டாமைப் பேயையும் கோயில்களிலிருந்து துரத்திவிட்டது. 1926–ம் ஆண்டில் சென்னை முதல் மந்திரியாகவிருந்த பனகால் மகாராசாவால் ஆரம்பிக்கப்பட்ட அறநிலையப் பாதுகாப்புத்திட்டம் இந்த ஆண்டில், எமது சமயத்தையும் அறநிலையங்களையும் ஒழுங்கான பழைய நிலைக்குக் கொண்டுவரக்கூடியமுறையில், திருத்தியமைக்கப்பட்டுள்ளது. சமய விஷயங்களில், கோயில்களின் மடங்களின் நிர்வாகத்தில், அரசாங்கம் தலையிட்டால் சமயம் அழிந்துபோகும் என்று கூக்குரல்போடும் தன்னலபுலிகள் அன்றுபோல் இன்றும் உளர். 'கோயில்களை இடியுங்கள், சாமியை உடையுங்கள், பூசாரிகளை அடியுங்கள்' எனச் சத்தம்போடும் உலகாயதர்கட்கு வலக்கைபோல் உதவி புரிவோர் இந்தச் 'சைபர்களே'யாம். இவர்கட்கு எங்கள் மதத்தின் மாண்பும் விளங்காது; அதின் சரித்திரமுந் தெரியாது. மதவெறிபிடித்த பறங்கியர்களதும் முகம்மதியர்களதும் நாசவேலைக்குப்பின்னரும் அழியாது நின்ற எங்கள் சமயமும் ஆலயங்களும் இனி அழியப்போவதில்லையென்ற உண்மையை இந்தப் பிற்போக்காளர்க்கு எடுத்துரைப்பதோடு, மூன்றாவது குலோத்துங்கன்காலத்தில் சில இந்துக் கோயில்களின் ஆட்சிமுறை கெட்டிருந்தபோது அந்த அரசன் தன் மந்திரியான மூவேந்த வேளாளனைக் கொண்டு விசாரணை நடாத்தி, குற்றஞ்செய்த தர்மகர்த்தாக்களைத் தண்டித்தும் விலக்கியும், ஊழல்களைக்களைந்த வரலாற்றையும் நினைவூட்ட விரும்புகின்றோம்.

காலதேவி வேண்டி நிற்கும் புதுச்சமுதாயத் திட்டத்தைப் பற்றி ஸ்ரீ ராஜாஜி கூறும் அபிப்பிராயம் "அரசியல் ஆதரவுடனும்,

சட்டமூலமாகவும் இல்லாமல் பணக்காரர்களை நம்பி சமுதாய சமத்துவத்தை ஏற்படுத்தலாமென்று சிலர்கருதுவது நிறைவேறாது. அரசியல் நிர்ப்பந்தம் இல்லாமல் பணக்காரர்கள் தங்களுடைய சொத்தை தரும பரிபாலனமாகச் செய்து ஏழைகளைப்பார்த்துக்கொள்வாரென்று இக்காலத்தில் எதிர்பார்க்க இயலாது" என்பதாகும். சமயத்துறையினும் கையாள வேண்டிய முறை அதுவேயென்பதை சென்னை மாகாணத்தலைமை மந்திரியாரும் உண்மையான நிஷ்காமிய கர்மயோகியுமான திரு. இராமசாமி ரெட்டியாரவர்கள் செய்கையால் விளக்கிவிட்டார்.

இலங்கையில் யாழ்ப்பாணத்திலுள்ள ஆலயங்களின் சீர்கெட்ட நிலைமையைக்குறித்து இங்குயாம் அதிகம் எழுதவேண்டியதில்லை. சென்ற சில ஆண்டுகளாக முக்கியமான கோயில்களின் உறுதிக்கட்டுகளும் கணக்கு ஏடுகளும் நீதிமன்றங்கள் மூலம் யாழ்ப்பாணத்திற்கும் கொழும்புக்குமிடையே அடிக்கடி பிரயாணஞ்செய்கின்றன; பலியிடும் காட்டு மிராண்டிப்பழக்கம் சில கிராமங்களில் இன்னும் தலைகாட்டுகின்றது தாசிக்கூத்துகள் குறைந்தபாடில்லை; சாதிக்கொடுமையோ முன்போல் அகோரமாகவேயுள்ளது. "கீழ்ச்சாதியினரிடம் சுத்தமில்லை, ஒழுக்கமில்லை. ஆகையால், அவர்களைக் கோவில்களுள் விடமாட்டோம்" என்று கூறும் உயர்சாதிச் 'சைபர்களுள்' எத்தனைபேர், சென்னைமாகாண கோயில் நுழைவுச்சட்டத்தின் பத்தாவது பிரிவின் மூன்றாவது விதியின் கீழ் உண்மையில் ஆலயங்களுட் செல்லக்கூடிய தகுதியுடையவர்களெனக்கேட்கின்றோம்? பல்லாண்டுகளாக இருந்து வந்த இந்த ஊழல்கள் போதாதென்று, இப்போ ஒரு புதுக்கொடுமையுஞ் சேர்ந்துள்ளது. அதாவது, கோயில்களில் நடக்கும் துணிவுகரமான துரோகமான களவுகள். பொன் வெள்ளி ஆபரணங்களைத்திருடுவதோடு நின்றுவிடாது, மூலஸ்தானத்திலுள்ள மூர்த்திகளையே பெயர்த்து அவற்றின்கீழ் வைக்கப்பட்டிருந்த தங்க யந்திரத் தகடுகளையும் களவாடுகிறார்கள். சென்ற மாசி மாசம் 25ந் தேதி (8-3-49) வெளிவந்த இந்துசாதனப்பத்திரிகையின் ஆசிரியர் கட்டுரையை வாசித்தபோது, யாழ்ப்பாணக்கோயில்கள் காலகதியில் நித்திய நைமித்திகங்கள் நடத்தலின்றி அழிந்து விடுமோவென அஞ்சினோம். இந்தப்புதிய தீமை பழைய ஊழல்களின் பயனாகவே தோன்றியுள்ள தெனலாம். ஆகையால், அவற்றைக் களைவதே அறிஞர் கடனாகும்.



'ஆத்மஜோதி' அபிமானிகளதும் ஏனைய இந்துக்களதும் கவனத்தை இந்த முக்கிய விஷயத்தில் ஈர்க்கும் நோக்குடன், சென்னை சைவத்திருவாளர் வி. கல்யாண சுந்தர முதலியார் அவர்களின் பொன் மொழிகள் சிலவற்றைப் பிறிதோரிடத்தில் பிரசுரித்துள்ளோம். சென்ற முப்பது முப்பைத்தைந்து ஆண்டுகளாக இந்தத்தமிழ்ப்பெரியார் கோயில் சீர்திருத்தத் தொண்டில், மகாநாடுகளின் தலைமைப் பேருரைகளாலும், கட்டுரைகளாலும், நூல்களாலும், பெரும் பங்கு பற்றியுள்ளார். அவர் இயற்றிய நூல்கள் சணக்கில. அவற்றின் சிகரம்போல் விளங்குவது 'உள்ளொளி'. அந்த அரிய நூலிலிருந்தே மேலே குறிப்பிட்ட வசனங்களைத்தெரிந்தெடுத்துள்ளோம். திரு. வி. கவைப்போலவே, யோகி ஸ்ரீ சுத்தானந்த பாரதியார் அவர்களும் பாட்டாலும் எடுத்துக் காட்டாலும், பத்திரிகை வியாசங்களாலும் புஸ்தகங்களாலும், தீண்டாமைக் கொடுமையை ஒழிக்குந் தொண்டில் அரும்பாடு பட்டவராகும். எனவே, அவரது திருமுகப்பொலிவுடன் வெளிவரும் இந்தச்சுடரில் அதே விஷயம் எடுத்துக்கொள்ளப்பட்டது சாலவும் பொருத்த முடைத்தாகும். அவருடைய ஜென்மநட்சத்திரம் சித்திரை மாச உத்திரம் என்பதையும் அன்பர்கட்கு நினைவூட்டுகின்றோம்.

---

### இறை அருள் மணக்கும் இடங்கள்

ஆட்ம்பரத்திலே அநியாய வாழ்விலே
அன்பிலா வாக்கி லேயுன்
அருள்மணஞ் சிறிதேனும் இல்லையென் றுணர்ந்துளோர்
ஆனந்த மவுனி யானோர்
வீடின்றி நாடின்றி ஓடேந்தி உண்கின்ற
மிடிமையுள் ளாரிடத்தும்
வெய்யில் மழையாதியாம் வேதனைகள் தாங்கியே
வினைகள் செய் வாரிடத்தும்
வேடம் புனைந்திடும் வாழ்வையே வேண்டாத
வித்தகச் சித்தர் பாலும்
விரும்பிடுங் குதலைமொழி சொரிந்துதன் பால்மணம்
வீசுங் குழந்தை பாலும்
நாடிநின் றுனதுபுன் னகைமுகங் காட்டுவாய்
நம்பினே னுன்பதத்தை
நாயே னெனக்கினிய தாயாகி நின்றுமெய்ஞ்
ஞானமருள் மோன குருவே.

"சுதந்திர ஜீவன்"

# சாதனைவாரத்தைப்பற்றி பாலயோகி ஸ்ரீ ராமதாஸ் தந்துள்ள விளக்கம்.

சத்சங்க அன்பர்களால் சாதனைவாரம் கொண்டாட ஏற்பாடு செய்திருப்பது மிகவும் போற்றற்குரியது. வாரம் என்றால் ஏழு நாட்களைக்குறிக்குமாயினும், சிறப்பாக வாரம் என்பது அன்பு என்று பொருள்படும். அருணகிரிநாதர் முருகனை விளிக்கும் போது,

'செஞ்சொல் அடியார்கள் வாரக்காரா!' என்கின்றார். சாதனை வாரத்தில் கூடும் அன்பர்கள் வாரம் உள்ளவர்களாக விளங்கவேண்டும். சாதனைக்கு உண்மையான உணர்ச்சி தேவை. இதய பூர்வமான உணர்ச்சி இருந்தால்தான் சாதனையில் ஊக்கமுண்டாகும். ஒருவருடைய கட்டுப்பாட்டிற்காகவோ, மேலெழுந்த உணர்ச்சிக்காகவோ, வெறும் வேடிக்கைக்காகவோ சாதனைவாரத்தில் கூடுவது பிரயோஜனம்தராது.

உண்மையான ஆத்ம பரிசோதகனுக்கு அவன் வாழ்க்கையே ஒரு சாதனைதான். அவன் சொல்லில், செயலில், கருத்தில் எல்லாவற்றிலும் கவனமாயிருக்கப் பழகுவான். அவன் வெற்றுரையாடான்; சோம்பித்திரியான், உள்ளதே போதுமென்பான்; புறங்கூறான்; பழிவாங்கலுக்கு அஞ்சிநடப்பான்; மனச்சாட்சிசொல்வதை மீறிநடவான், அவன் பேச்சில் அர்த்தபுஷ்டி ததும்பிநிற்கும்; கண்ணில் ஞானஒளிவீசும். பிறர் மெச்சுதலுக்கும் போற்றுதலுக்கும் உட்படான்.

'தம்கடன் அடியேனையுந் தாங்குதல்
என்கடன் பணிசெய்து கிடப்பதே'

என்ற பல்லவியே அவன் முழக்கம். எத்தனை இடுக்கண்கள் வந்தாலும் அதை எதிர்த்து நின்று போரிடுவான்; எடுத்த பணியைத் தொடர்ந்து முடிப்பான்.

எப்படி எப்படி உன் இச்சை
அப்படி அப்படி இவ்வுடலை யாட்டு.

என்று, சர்வாந்தர்யாமியான பரமாத்மனுக்கே தன்னை முற்றும் அளித்து விடுவான். இதுவே உன்னதமான சாதனை. இதனை அடையவே, ஜபம், தியானம், மௌனம், பிரார்த்தனை ஆசாரநியமம் முதலியவை அவசியம் தேவையாக இருக்கின்றன.

---

# சிவகங்கையில் எழுந்த செந்தமிழ் வாணி.

(கவிராஜ பண்டித. நா. கனகராஜஐயர்)

செந்தமிழ்வாணி புதிய பொலிவுடன் எழுந்தாள்; இரண்டு வாடாமலர்களைத்தந்தாள். ஒன்று வீராவேசத்திருவுடன் பொலிந்து காலவெள்ளத்தில் மறைந்தது; அதன் மணம் காலத்தை வென்று பரவுகிறது; மற்றொருமலர் சிவகங்கையில் வேர்கொண்டு, சேரமா தேவியில் அரும்பி, புதுச்சேரியில் மலர்ந்து, பரமசாந்த நிலையிலிருந்து புதுமணம்பரப்புகிறது. இப்புதுமலரைத்தமிழர் அறிவர்; அதன் தூய இன்பத்தை இன்னும் நன்றாகத்தமிழர் உணர வேண்டும். சுப்பிரமணிய பாரதியார் கவி மழை பொழிந்தார்; உடலுள்ளவரையில் அவர் பெருமையைத்தமிழர் அறியவில்லை, இன்று அவர் கவிதையை உச்சிமேல் வைத்துக்கொண்டாடித்திருவிழா நடத்துகின்றனர். சுவாமி சுத்தானந்தபாரதியார் இதோ இருக்கிறார்; ஓயாமல் கவிமலர் கொட்டுகிறார். அவர் மூச்செல்லாந் தமிழ்ப்பணியே! அவர் வாக்கு நீண்டதவத்தில் மலர்ந்த அருள்வாக்கு. அவர் நிலையானகலைச் செல்வத்தை மலைமலையாக வாரிக்குவித்திருக்கிறார். அவரையும் தமிழர் புறக்கணிப்பரோ? நிகழ்காலம் ஒதுக்கினாலும், வருங்காலம் இந்த அருட்கவியை மதிப்பதுறுதி; அவர் மொழி உள்ளெழுந்த நிறைமொழி; அவர் திருவாக்கு நன்றாகச் செதுக்கிய மாணிக்கம்; புடம்வைத்துப்பொலியும் தங்கம்; போலித்தங்கமன்று; புலவர் உரைகல்லில் உரைத்து மதித்த பத்தரை மாற்றுத்தங்கம். எவ்வளவு சோதனை செய்தாலும் அது காலத்தை வென்று விளங்கும்.

தாகூர் கவிதையை அன்னியர் கொண்டாடிய பிறகே, நம்மவர் போற்றினர்; அறிந்தனர். சுவாமி சுத்தானந்தர் கவிதை இன்னும் பலர் அறியாப்புதையலாகவேயிருக்கிறது. அப்புதையல் அழகுக்கோயில், கலைப்பள்ளி, இன்பவூற்று அவர் வாழ்வே கவிதை; நினைப்பும் உயிர்ப்பும் கவிதை; அவர் எழுதிய வசனமும் கவிமணக்கும்; பாவனா ரஸம் ததும்பும். உணர்ச்சி அலைபொங்கும்; வீரம் ததும்பும்; நகைச் சுவை பொங்கும்; பக்தியும் ஞானமும் கரைபுரண்டோடும்.

அக்காலம் திருவள்ளுவர் முப்பாலைக்குறளாகச் செய்தார். இக்காலம் யோக நிலையிலிருந்து சுத்தானந்தர் யோகசித்தி என்னும் அற்புத நூலை அருளினர். அதுபலர் வாழ்விற்கு வழிகாட்டி விளங்குகிறது.

பழந்தமிழரைக் கிண்டிக்கொண்டிருப்பதால் மட்டும் தமிழ் உயரமுடியாது. தமிழை உலகமொழியாக்க அதில் புதிய ஒளியும், புதிய கருத்தும் கொண்டுவரவேண்டும்!

"தமிழின் பெருமைகளைப் பேசுவோம்!—பழந்
தமிழிற் புதியவொளி வீசுவோம்!
தமிழர் ஒருகுலமாய் வாழுவோம்—இளந்
தமிழர் தமிழ் விரதம் பூணுவோம்!"

பழந்தமிழிற் புதிய வொளி வீசுவதெப்படி? சுவாமிகள் எழுதிய சிலம்புச் செல்வம், ஸ்ரீராமதூதன், கம்பக்கவி இன்பம், திருக்குறளின்பம், திருமந்திரவிளக்கம், கீதாயோகம், முதலிய பழம்பொருள் பொதிந்த புதுமலர்களைப் பாருங்கள்! அவைபோலவே இன்னும் ஆயிரம் நூல்கள் தோன்ற நம் மொழிக்கு வலிமையுண்டு; உரிமையுண்டு; தமிழர்களே கவிஞர் கூறுவதைக்கேளுங்கள்:—

"சுற்றியுள்ள நாடுகளை நோக்குவோம்—அங்கே
சொக்கும் புதுமை நம் தாக்குவோம்!"

மனம் வைத்தால் உலகில் முடியாத காரியம் எது? தமிழீர்!

ஆற்றலை மறந்தின்னும் தூங்கவோ?—செல்வம்
அளவற்றிருக்கப் பிச்சைவாங்கவோ?
நாற்றிசையும் தமிழிசை நாட்டுவோம்—இங்கே
நாமும் மனிதரெனக் காட்டுவோம்!"

ஆ, என்ன உணர்ச்சி! என்ன உத்தேசம்! இது பலிக்கும் காலம் வரத்தான் போகிறது.

---

சுத்தானந்த பாரதியார் நூலை நான் கருத்துடன் படிப்பதுண்டு; அவரைப்போன்று, அற்புத நூல்களை யார் செய்யமுடியும்? ஒருநாளைக்கு ஒருநூல் எழுதவல்லவர்.

— ஸ்ரீ சக்ரவர்த்தி ராஜகோபாலாசாரியார்.

# அருணையில் குருவையடைந்த அற்புதக் காட்சி.

(சுத்தானந்த பாரதியார்)

தீவிரமான ஞானப்பசி யெடுத்தது. ஜீவன் முக்தர் வரலாறுகளையும், உபதேசங்களையும், புனிதநூல்களையுங் கற்று நினைத்துப் பாடி எழுதிப்பரவசமாவதே முயற்சியானது. பலமதப்பெரியோர்களையும் நேர்ந்துழி சென்று வணங்கி ஞானஸாதனம் பெற்றுக்கொண்டதுண்டு. தாயுமானரை ஆர்வமுடன் பாடுவதுண்டு, பகவத்கீதையே ஞானவழி காட்டியாகப்பின்பற்றி, அதைப்பின்பற்றியனுபவங்கண்டோருடன் உறவு கலத்தல் உண்டு. தன்னலமற்ற பணியே, அகந்தை யொழிந்து வாழ்வைப் புருஷோத்தமனுக்கு வேள்வியாக்கும் வழியெனப் பலதுறைகளிற் பணிமேற்கொண்டதுண்டு. பணிக்குச்சக்தி வேண்டுமென, ஹடராஜயோகங்கள் பயின்றதுண்டு. இவையெல்லாம் உண்டெனினும் உள்ளே நீக்கமுடியாத ஒருகுறையுண்டு. ஹடராஜயோகத்தால் உடலுயிர் மனத்தில் சில திறமைகள் உண்டாயின. ஒலியும் ஒளியும் ஒருமைப்பாடும் எய்தின வெனினும், அவை பொருட்டாகத்தோன்றவில்லை. சமயம், கவி, இலக்கியம் பத்திரிகை, ஆசிரமக்கல்வி, அரசியல், சமுதாயமுன்னேற்றம், கிராமநிர்மாணம் முதலிய பலதுறைகளிற் பாய்ந்தும் வாழ்வு அமைதிக்கடல்சேரவில்லை. இசையும் புகழும் எத்தனை இன்புறுத்தினும், இவையெல்லாம் மின்னெனத்தோன்றி மறைந்தன. புகழ்மாலைகள் குவிந்தன; ஆனால் அவற்றிலிருந்து தேனீக்கள் என்மனதைக்கொட்டிப் புண்படுத்தின.....................

இந்நிலையில் யாராயினும் ஒருவர் எதிர்பாராது வந்து பகவான் ரமணமஹரிஷிகளைப்பற்றிச்சொல்லுவதுண்டு. முதல் முதலில் பகவானுடைய படத்தைக்கொண்டு ஒருவர் வந்தார். அப்போது ஓர் மனவுறவு ஏற்பட்டது. ஒருகாந்தம் இதனை இழுத்தது. திருவண்ணாமலையினின்று யார் வரினும் மஹர்ஷிகளைப்பற்றிக்கேட்டு ஆனந்திப்பது இயல்பாயிற்று...........திருவண்ணாமலையில் அப்போது நடந்த அரசியல் மஹாநாட்டிற்கு ஸ்ரீமான் வ. வே. சு. ஐயர் சென்றுவந்தார். உடனே அவரை மஹர்ஷிகளின் விவரமே கேட்டது.

"ஆஹா! தமிழ்நாட்டில் ஒரு ராமகிருஷ்ணபரமஹம்ஸர் அவதரித்துள்ளார்! அவர் ஜோதிபர்வதமாக விளங்குகிறார். அவரைப்

பார்க்கவே முதன்மையாகத் திருவண்ணாமலைசென்றேன்! மலையினும் அவருடைய கம்பீர்யமே அற்புதமாயிருக்கிறது.! அவர் சந்நிதானத்தில் நமஸ்கரித்து உட்கார்ந்ததும் என் மனம் புதிய சாந்தியடைந்தது. நமது தமிழ்நாடு பாக்யம் செய்தது. பாரததேசம் இம்மஹானைப்பெறப் புண்ணியம் செய்தது. பாரதி! அவரைக் காணவேணும்'' என்றுரைக்கவே தெய்வக்காதல் கொழுந்து விட்டெரிந்தது. பிறகு, பகவானே நினைப்பு; அதன்பிறகு ஆண்டவன் விடுத்த தூதுபோன்று ஸ்ரீகணபதிமுனிவர் குருகுல சமரஸ் முடிவிற்காகவந்தார். அவரைக் கண்டதும், ஆழிகண்ட தேவியாகி மனஞ் சிலிர்த்தது...............இதை ஏதோ ஒரு பசி மஹர்ஷிகளின் பாலே இழுத்தது. ஓரிரவில் தியானம் செய்கையில் தாங்கமுடியாத அன்பு பிறந்துவிட்டது. மஹர்ஷிகளை உடனே காணாவிடில் உயிர் நிலைக்காதெனும்படி' அவ்வளவு கடும்பசி யெடுத்தது.

மறுநாட்காலையே நேராக திருவண்ணாமலைக்கு வந்ததும், மனதில் ஓர் சிலிர்ப்பு ஏற்பட்டது. ஒரு அரசியல் நண்பர் வீட்டில் சாமான்களைவைத்துவிட்டு, உடனே மலையை நோக்கி மீப்பாய்ந்து,, பகவான் தவமிருந்த இடங்கள் குகைகளெல்லாம் கண்டதும், வெட்கமும், ஆத்மவீரமும் மனதைக்கவர்ந்தன; ''அந்தோ வாழ்வை வீணாக்கினோம்! நிலைதெரியாது அலைந்தென்ன பயன்? தன்னையறியாது பிறருக்கு அறிவுபுகட்டும் மடமையினும் மடமை வேறில்லை!'' உடல், உயிர், மனம், நடை ஒன்றும் உணரவில்லை. 'பகவான் ரமணர்' அதுவே குறிப்பு, மலையருவி ஆழமாகப்பாய்வதுபோல, ''நான்'' என்னும் நினைப்பினின்று ஜீவாத்மா விரைந்தெழுந்து, கடலையணுகிய வெள்ளம்போல எல்லாம் குருநாதன் பாதம் என்னும் உணர்வில்பாய்ந்தது. இனியிவ்வாழ்விற்கு அலைவில்லை; இதோ ஞானக்கடல், ஜோதிமலை! சோதிமலையிற் சுடர்ப்பூச்சியானது இம்மனோ மாயவாழ்வு!...............

மாலை ஆறரைமணி. மலை கம்பீரமாகப் புடைசூழ்ந்து தொடர்கின்றது. ரமணாசிரமம் மலையடிவாரத்தில் இருப்பினும், மலையே ரமணாசிரமத்தின் அடிவாரத்தில் பணிந்து நிற்பதாகக் காணப்பட்டது. ஆசிரமத்தின் புனிதத்தென்றல் 'சிவோஹம்' என்று வீசிற்று அங்கு அப்போது கூட்டமில்லை. ஆசிரமம் ஏகாந்த நிஷ்டையிலிருந்தது; அதன் ஒவ்வொரு அங்குலமும் ரமணாலயமாகவே தோன்றிற்று! அன்பும், அழுகையும், இன்புங்கூடி, அடிமையை ஆசிரமத்



துள் இழுத்துச்சென்றன. கணபதி முனிவரை முதலில் வினவியதும், 'இங்கேயிருக்கிறார்' என்று ஒரு கோயில் காட்டப்பட்டது. வேறொன்றையும் கவனிக்கவில்லை; முனிகளைக்கண்டு அவர்பின்னே ஆண்டவன் சந்நிதிக்கு வணக்கமுடன் செல்லவேண்டுமென நினைத்தது. முனிவர் கம்பீரமாக வேதமழை பொழிகிறார். கன்மமூட்டைகளை வெளியே வைத்து, உள்ளேவிரைந்ததும், வலதுபுறம் ஒரு பால் வெளியே தென்பட்டது; திறந்த வால்வெளி யென்றெண்ணி அதை நோக்காது முனிகளுக்கு சாஷ்டாங்க நமஸ்காரஞ் செய்து, 'அடியேன்' எனுமுன்னே 'ஆஹா! அங்கே பகவான், என்றார் முனிகள்! உடனே தூக்கிவாரிப்போட்டது! ஆகா! நான் தேடிய பொருளன்றோ அருவாக அருகிற் பளிச்சிட்டது. மிகவும் தயாரிப்போடு பகவானை முனிவருடன் கூடக்காணச் செல்லவேண்டுமென்றெண்ணியதெல்லாம் ஒரு நொடியில் திடுக்கிட மறைந்தது. உடனே வலப்புறந்திரும்பவும் கண்டதென்னே! மனித வடிவல்ல; ஒரு வெண்ணீற்றுக் குவியலே முதலிற்றென்பட்டது. பிறகு முற்றும் ஜோதிப்பிழம்பு! பிறகே, கை காலை மடித்து உட்கார்ந்து இதையாட்கொண்ட பகவான் இதன் வணக்கங்களையும் எதிர் பாராது,

''பாரதியார்! பாரத சக்தி எழுதியிருக்கிறார்'' என்று தொடர்ந்தவுடன் இது மூர்ச்சையானது! பேசமுடியவில்லை! ஆனந்தம்! என்னே! மொழியுமுன்னே இதன் வரலாற்றையும் அறிந்து பல்லாண்டுகள் பழகிய நண்பரைப்போல உறவாடுகின்றார்! இதனாயுளில் இத்துணை தூய அன்பை யார்பாலுங்கண்டதில்லை. என்ன தெளிவு, தேசு, அன்பு, கருணை! ஆ! மனச்சந்தேகங்களெல்லாம் நீங்கின. இது குழந்தையானது.......மனம் உருகியது. இன்பம் பெருகியது. பகவான் ''பாரதி இங்கு சாப்பிடுமா?'' என்றார். ''என் ஐயனே! வேறெங்கு என்பசிக்கு அன்னமுள்ளது! காடு மலையெல்லாம் சுற்றி வற்றி முடிவில் மூலிகையைக்கண்டுபிடித்தது, ஆனந்தம்! பகவான் கரத்தால் ஒருபிடி பிரசாதம் பெற்றால் ப்ரஹ்மஜ்ஞான விதையும் அதனுடன் நாட்டப்பெற்று இந்நிலம் சிவானந்தப்பயிர் விளைக்கும்! பகவானே! இதன் ஆத்மப்பசி அடங்காதது! அதற்கு அன்னம் தமதிடமே யுள்ளது அதை நாடியே வந்தது'' என்று அடி சாய்ந்து சரணமடைந்தது.

கண்பட்ட போதேயுன் கைப்பட்ட தென்னாவி
புண்பட்ட சிந்தையெலாம் போய்.

# கோயில் சீர்திருத்தம்.

[திரு. வி. க.]

கோயில் சீர்திருத்தம் பலவிடங்களில் பேசப்படுகிறது! பெரிதும் ஹிந்துக் கோயில் சீர்திருத்தம் பேசப்படுகிறது. ஹிந்துக் கோயில்களில் பலதிற மாசுகள் படியுமாறு மக்கள் நடந்தார்கள்; நடக்கிறார்கள். அவைகளைக் களைந்து கோயிலைக் கோயிலாக்குவதும் சிறந்த தொண்டேயாகும். இத்தொண்டில் தலைப்படுவோர் கோயிலமைப்பிலும் வழிபாட்டிலும் பற்றுடையவராயிருத்தல் வேண்டும் பற்றுச்சிறிதுமின்றிச் 'சீர்திருத்தம் சீர்திருத்தம்' என்று கூக்குரலிட்டுத் திரிவோர் கொள்ளைக் கூட்டத்தவராகத் திரும்பினுந் திரும்புவர். பொதுவாகச் சீர்திருத்தத்தில் சிறப்பாகக் கோயில் சீர்திருத்தத்தில் இறங்குவோர் அன்பராய்த் தொண்டராய்த் தன்னலமற்றவராயிருத்தல் வேண்டும்.

## உயர்வு தாழ்வு.

ஹிந்துக் கோயில்களில் உயர்வு தாழ்வுச் சிறுமை பிறப்பிலுங் கருதப்படுகிறது; சிறப்பிலுங் கருதப்படுகிறது. கோயில்களில் பிறப்பில் சாதி பாகுபாடு கருதப்படுவது அறமாகாது. ஓவியம் மாத்தடியில் இருந்தஞான்று, வழிபாட்டில் உயர்வு தாழ்வு கருதப்படவில்லை. மண்டபங்களும் கோபுரங்களும் ஏற்பட்டபின்னரும் பொது வழிபாடே நிகழ்ந்து வந்தது. இடைநாளில் விதிகளும் கட்டுப்பாடுகளும் கோயிலுக்குள் புகுந்தன. சாதி வேற்றுமையும் உடன் புகுத்தப்பட்டது. சமூகத்தில் தோன்றிய கொடுமை கோயிலிலும் நுழைந்தது.

---

முற்பக்கத்தொடர்ச்சி.

எழுந்து உட்கார்ந்தார் என் கருணைக்கடல். மனிதனில்லை கண்டது! ஒரு ஜோதிர்லிங்கத்தையே கண்ணாரக்கண்டது! பகவானுடைய தலைலிங்கம் போன்றது. சுகாஸனத்திலிருந்த கால்கள் ஆவிடை போன்றன. மூன்று மடிப்புகளுடன் 'உயர்ந்த பொன்னார் மேனி' லிங்கத்தின் உடல்போன்றது. இக்காட்சி மனமயக்கமல்ல! அப்படியே கண்டது! ஸத்குருவும், ஜோதிமலையும், ஜோதிர்லிங்கமும் ஒன்றெனத் தெளிந்தது. அக்காட்சி என்றும் உள்ளத்தில் பதிந்தொளிர்கிறது.



## ஆன்றோர் முயற்சி.

இக்கொடுமையைக் களைய அவ்வப்போது அறிஞரால் முயற்சி செய்யப்பட்டேவந்தது, வெற்றி விளையவில்லை. நாயன்மாரும் ஆழ்வாரும் முயன்றனர் அவர் வழிவழி வந்த ஆன்றோரும் முயன்றனர். அப்பெரியோர் முயற்சிகளெல்லாம் ஏட்டளவில் நிற்கலாயின. திருநீலகண்ட யாழ்ப்பாணர், திருப்பாணாழ்வார், திருநாளைப்போவார், திருநீலநக்கநாயனார், இராமாநுசர் முதலியோர் வரலாறுகளைப் பார்க்க. அவ்வரலாறுகள் ஆண்டவன் திருவருள் நோக்கத்தை நன்கு புலப்படுத்துகின்றன. பொல்லாத சமூகம் ஆண்டவன் திருவருள் நோக்கத்தையும் புறக்கணித்தது. இது பற்றி என்னுடைய நூல்களிலெல்லாம் விரித்தோதியுள்ளேன், பொதுமை யுணர்வு புத்துயிர்பெற்றுவரும் இந்நாளிலாதல் பிறப்பில் உயர்வு தாழ்வு கருதுங் கொடுமையை யொழிக்க அறிஞர் உழைப்பாராக. உண்மை உழைப்பு உறுதி நல்கியே தீரும்.

ஹிந்து கோயில்களில் சிறப்பில் உயர்வு தாழ்வு கருதுவதை விரித்துக் கூறவேண்டியதில்லை. உத்தியோகஸ்தர் வாடைவீசியதும் அர்ச்சகரும் தர்மகர்த்தரும் மற்றவரும் ஓடி வருகின்றனர்; கைகட்டுகின்றனர்; அவரைச் சூழ்ந்துகொள்கின்றனர்; கட்டியம் பாடுகின்றனர். உத்தியோகஸ்தர் கடவுளாக ஏற்கப்படுகிறார் அவர்உடல் பூரிக்கிறது, அவர்கோயிலுள் ஏன் புகுந்தனர்? பாவம்! வெட்கம்! வெட்கம்! மசூதியில் கற்றவரும் கல்லாதவரும் நவாபும் பக்கிரியும் பொதுவாகவே பாவிக்கப்படுதல் ஹிந்து கோயில் குருமாருக்குப்புலப்படுவதில்லைப்போலும்! சந்நிதியில்உத்தியோகஸ்தரை ஒருவிதமாகவும், மற்றவரை வேறுவிதமாகவும் பாவிப்பது மடமை, இழிவு. கோயில் சிறுமைக்குப் 'படித்த' பதவி வேடரும் காரணர் என்று கூறல் மிகையாகாது. உத்தியோகஸ்தரை வரவேற்றுத் தனிச்சிறப்புச்செய்யும் இழிவு கோயிலினின்றும் அகலப்பெறல் வேண்டும்.

## 'நான்'

வழிபாட்டுக்கென்று கோயில் அமைந்தது. வழிபாடு 'நான்' என்னும் முனைப்பை அகற்றுவது. கோயிலிலுள்ள பலிபீடத்தின் அறிகுறி என்ன? 'நான்' என்பதைப் பலியிடுவதை அறிவிப்பது அப்பீடம். மக்கள் அங்கே தலையாரக்கும்பிடுகிறார்கள்,

(169ம் பக்கம் பார்க்க)

# புதுவையில் பூரணயோகி தரிசனம்.

(சுத்தானந்த பாரதியார்)

அலைகடல் ஓம்என்றார்க்கு, அமுதவாய்ப் புட்கள் ஆர்க்கும்,
பலகலைத் தொழில்கள் ஆர்க்கும், பயனுள கல்வி ஆர்க்கும்,
அலைதொரு சத்தமில்லா அமைதியில் ஓங்குகின்ற
நிலையுமே புதுவையோகி அரவிந்த நிலையமாமே.

மலர்கனி குலுங்குகின்ற மலையென மாளிகைகள்
புலமைகள் குலுங்குகின்ற பொன்முக நல்லோர்கூட்டம்,
தலைவரே தெய்வமென்னும் சாதகர் சங்கம் ஓங்கி
நிலவிடும் கோவில் எங்கும் நிம்மதி காணலாமே.

வெண்மணி யாடையன்றி வேறொரு பூணும் இன்றிப்
பெண்மையும் ஆண்மையன்பும் பேரின்பக்கொடிபோலோங்கி
உண்மையும் உழைப்புங் கொண்ட உயர் நலவாழ்வு வாழும்
தண்பொழில் இதுவே; பூமிதாங்கிடும் சுவர்க்கமம்மா!

புண்ணியப் புதுவை மேவும் பூரணயோகி கண்ட
விண்ணியல் அரசினுக்கு வெற்றிசேர் திருவாய் வந்தாள்,
கண்ணிலே கருணைபொங்கும் கனியிதழ் அமுது பொங்கும்,
வெண்ணிறச் சக்தி யன்னை அவள் செயல் விளம்பப்போமோ!

ஒன்று மற்றிரு ளோங்கிடும் வாழ்வினை
    ஊறும் ஆனந்த ஊற்றென மாற்றினை;
கன்றி னுக்குரு கும்பசு என்ன நீ,
    கனிந்தெம் உள்ளக் கவலையைத் தீர்த்தனை
தொன்று தொட்ட களிம்புறு மேனியைத்
    தூயதங்கச் சுடரென ஆக்கினை
வென்றி யோங்கி அரவிந்த வேந்த நீ
    விண்ணரசைப் புவிமிசை யாளுவாய்

சுவாமி சுத்தானந்தர் கைக்கொள்ளும் முறைகள் புதுமையும் தனிமையுங் கொண்டவை. இவர் பிறவிதிகளையும் மத சித்தாந்தங்களையும்பற்றிக் கவனம் கொள்வதில்லை. இவர் திருவாயினின்றும் ஞானவெள்ளம் பெருகும். பார்வை அன்பு மழைபொழியும்; நடத்தையில் எளிமை தோன்றும். இவரைச் சூழ்ந்து காந்த சக்தி நிலவும்; முகமண்டலத்தைச் சுற்றி ஜோதி வீசும்; பேச்சிலே உண்மை ஆர்வம் காணும். இவரைக்காணும் பாக்கியசாலிகளின் உள்ளத்திலே இவை நிரந்திரமாகப் பதிந்துவிடும்.

—ஸ்ரீ சுவாமி சிவானந்தர்



அதன் கருத்து 'நான்' என்பதைப் பலியிடுவதாகும். 'நான்' என்னும் முனைப்பை அழிப்பதை உணர்த்துங் குறிகள் இன்னும் பல உள்ளன. முனைப்பை அழிப்பதற்கென்று ஏற்பட்ட அமைப்பில், அம்முனைப்பை எழுப்புதற்குரிய 'மரியாதை' செய்வதும், அதை ஏற்பதும் நியாயமாகா. 'நான்' பலியாகுமிடத்திலா 'நான்'? அந்தோ! அந்தோ!! கோயிலுள் 'மரியாதை' செய்யப்படுவதை அறவே ஒழிக்க முயல்வது பெருந்திருத்தொண்டாகும்.

## மரியாதை?

'மரியாதை' பெரிதும் அர்ச்சனை முதலியன செய்வோர்க்கும் அளிக்கப்படுகிறது. அர்ச்சனையின் அடியில் அன்பிருத்தல் வேண்டும். ஆனால் என்ன இருக்கிறது? பணம்! பணம்! பணம் படமெடுத்து ஆடுகிறது! பணங்கொடுக்கும் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு போதும் தனித்தனியே அர்ச்சனை செய்யப்பட வேண்டுமென்னும் நியதி யாண்டுள்ளது? எந்த ஆகமத்திலுள்ளது? இக்கேள்விகளைக் கோயில் அர்ச்சகர்களை நோக்கிக் கேட்கிறேன். பணத்துக்கு அர்ச்சனை என்பது இடையில் நுழைந்த புன்மை. கற்பூர ஆராதனை கோயிலுள் இடம்பெற்ற நாள் தொட்டு, இப்புன்மையும் அங்கே இடம் பெறலாயிற்று. தனித்தனி அர்ச்சனை வழக்கமும் தொலைதல் வேண்டும்; அதனுடன் தொடரும் மரியாதையும் தொலைதல் வேண்டும்.

## வழிபாட்டு முறைமை

ஓவிய உருவைத் துப்பரவு செய்து, மலரணிந்து, குறித்த வேளையில் தூபதீப வழிபாடு, மந்திர வழிபாடு முதலியன செய்து பின்னைப்பட்டர் ஒருபக்கத்தில் அமர்ந்து, ஒழுங்கு முறைகளைக் காத்து வேண்டுவது அவர்தங் கடமை. அன்பர்கள் மலராலோ பாட்டாலோ மனத்தாலோ எப்படியோ வழிபாடு நிகழ்த்திச்செல்வது முறைமை. இது பண்டைய வழக்கு. இடைநாளில் இவ்வழக்கு வீழ்த்தப்பட்டது. பணப் பேய் நன்முறையை வீழ்த்தியது. அன்பர்கள் நேரே வழிபாடு செய்யும் முறைமை மீண்டும் புதுப்பிக்கப்பட்டால் கோயில் பலவழியிலுஞ் சீர்பெறும்.

முன்னாளில் பட்டர் வடமொழி தென்மொழிகளில் வல்லவராய் பல தத்துவ ஞான நூல்களை ஆராய்ந்து தெளிந்தவராயிருந்த

# — நான்கண்ட சர்வாத்ம சமத்துவம். —

திரிகாணசுத்தம், ஆத்ம சுதந்தரம், சர்வாத்ம சமத்துவம்— இந்த மூன்றும் மனச்சாட்சி எனக்குக் காட்டிய லட்சியங்கள். பதிஞயிரம் நூல்கள் படித்தும் என்ன? அதோ மேலே பரந்து விரிந்து என்னைப் பார்க்கிற வானுக்கு நிகராக எந்த நூலைச்சொல்லமுடியும்? தெய்வத்திருவருளே தோகை விரித்து நித்திய நடனம் புரிவது போலத் தோன்றுகிறதுவான் விரிவு. அந்தத் தோகையிற் பதிந்த ஒவ்வொரு நட்சத்திரமும் அறிவின் கருமூலம். கோடிக்கணக்கான உலகங்கள் மேலே சுழல்கின்றன. அவற்றுள் இந்த மண்ணுலகம் ஒரு தூசிபோலும். இத்தூசியில் கோடிக்கோடி உயிர்கள் வாழ்கின்றன. அந்த உயிர்களில் இந்த உடலுயிர் ஒன்று. வானில் எத்தனையோ பரமாணுக்கள் சுழல்வது போல் உலகில் இந்த உடலுயிரும் சுற்றுகிறது. என்னைப்போல் இந்த உலகில் இருநூறு கோடிமக்கள் உயிர்க்கிறார்கள். அத்தனைபேருடனும் நான் ஐக்கியப்பட்டுணர்கிறேன். ஏனெனில் ஒவ்வொருவருக்கும் உயிர் ஒன்று. ஐம்பூதக்கூண்டில் அந்த உயிர்க்கிளி வாழ்கிறது. பிறர்பசி தாகத்தை எனது பசி தாகமாக உணர்கிறேன். உலகில் எந்த நாட்டார் வருந்தினாலும் என் மனதில் சுரீர் என்கிறது. ஏனெனில் நான்யார் அவர்யார்? எல்லா உயிர்களும் ஒரே சங்கிலித்தொடர். அந்த உயிர்ச் சங்கிலியில் என் ஜீவனும் இணைந்ததே. உலகில் ஒருவன் பசித்திருக்குமட்டும் நானும் பசித்திருக்கிறேன். உலகில் ஒருவன் துன்புறுமட்டும் எனக்கும் இன்பநிறைவாகாது. எனக்கு நான் எப்படியோ அப்படியே பிறருக்கும் இருக்கவேண்டும். எனக்கென்று தனியுடைமை கூடாது. என் உடல் பொருள் ஆவி எல்லாம் என் அறிவு ஆற்றல் எல்லாம் உலகப் பொதுவுடமையாக வேண்டும் என்பது தான் எனது சர்வாத்ம சமத்துவம்.

இந்த அகண்ட சமரஸ வுணர்ச்சியை சாதிக்க சுதந்தரம் வேண்டும். சாதிமத சாத்திர கோத்திர நாடு நிறக்கட்டுப்பாடுகளி

முற்பக்கத்தொடர்ச்சி

னர். அவர் நிலைமை இந்நாளில் மாறியிருக்கிறது. அவரை நோதல்கூடாது. காலநிலைமையை நோதல்வேண்டும். இப்பொழுது பட்டருள் பெரும்பான்மையோர் கிளிப்பிள்ளை போலச் சில மந்திரங்களை ஒப்புவித்துத் திருமேனி தீண்டுந் திருத்தொண்டு செய்து வருகின்றனர். பொறுப்பு வாய்ந்த தொண்டு செய்யும் பட்டர் கல்வி அறிவு ஒழுக்கத்தில் சிறந்து விளங்குவது மற்றவர்க்கு எடுத்துக்காட்டாகத் துணைசெய்யும் ஆதலின் வடமொழி தென்மொழிகளைப் பயின்று, தேர்ச்சியடைந்து, தத்துவஞான நூல்களில் நுண்புலமை பெற்றவரைப் பட்டராகுமாறு பொதுமக்கள் முயல்வது நல்லது.



லிருந்தெல்லாம் விடுதலை பெறவேண்டும். இந்தச் சுதந்திரத்திற்கு அப்பழுக்கற்ற தூயசுத்தாத்ம அனுபவம் வேண்டும். சுத்த அனுபவம் பெற, யோகத்தால் என்னை நான் அறிந்து, என்னிறைவனையறிந்து அவன் மயமே எல்லாம் என்றறியவேண்டும். இந்த அறிவு தான் என்வாழ்க்கையின் அடிப்படை. அதன்மேல் எழுந்ததே எனது கனவுலகின் கலைக்கோயில். இந்தக்கோயிலில் நான் யோகத்தால் கடவுளையே வணங்குகிறேன்.

சுத்தானந்த பாரதி

('ஆத்ம சோதனை' என்னும் பேரால் வெளிவர இருக்கும் பெரிய நூலிலிருந்து எடுக்கப்பட்டது. சுவாமிகள் தம் அனுபவச்செல்வங்களை யெல்லாம் நாட்குறிப்புகளாக இதில்வரைந்து குவித்துள்ளார்.)

## முத்தமிழ்வளர்க்கும் முனிவன்.

சுப்பிரமணிய பாரதியார் கண்டகனவை நனவாக்குஞ் சிறப்பைச் சுத்தானந்தர் பெற்றார். இன்று இவர் பெயர் பரவாத தமிழகப்பகுதி இல்லை. இவர் நூல்களைப் படித்துப் பயன்பெறாத தமிழர் இல்லை. இவர் கதை, கவிதை, கட்டுரை முதலியன பிரசுரமாகாத பத்திரிகை இல்லை. இவருடைய கீர்த்தனங்களைப் பாடாத இசைப்புலவர்கள் இல்லை. 'என்றுமுள தென்றமிழ் இயம்பி இசை கொண்டான்' என்றும், 'நீண்ட தமிழால் உலகை நேமியின் அளந்தான்' என்று கம்பர் அகஸ்தியமுனிவரைப் பாராட்டிப் புகழ்ந்தார். அவ்வுண்மையை நம் நூல்கள்வாயிலாகமாத்திரம் அறிந்தோம்.

இந்த நூற்றுண்டில் அவ்வாறு தமிழறிவையும் தெய்வமணத்தையும் நாட்டில் பரவச்செய்த பெருமையைச் சுத்தானந்த முனிவரிடங் கண்கூடாகக் காண்கின்றோம். 'முத்தமிழ் வளர்க்கும் மோனமுனிவர்' என்று வாய்குளிர இவரை இன்று உலகம் புகழ்ந்து போற்றுகிறது. வங்கத்தின்பெருமையையும் வங்கமொழியின் வளத்தையும் வளர்க்கவந்த வரகவி தாகூர்போலத் தமிழ்நாட்டின் பெருமையையும் தமிழ்மொழியின் வளத்தையும் வளர்க்க வந்தார் சுத்தானந்த மாமுனிவர். அதனால். அவரைத் தமிழ் நாட்டின் தாகூர் என்று பாராட்டிக் கூறுவது பொருத்தமாகும்.

—தி. கா. நாகன்;

சென்ற இதழ் தொடர்ச்சி

# மதமற்ற மார்க்கம்.

[மொழிபெயர்ப்பு—விசாகர்]

## மனிதவாழ்வின் லட்சியம்

யாக்கை குறுகியது. இறைவனில் வாழ்ந்து அதைப்பெருமையாக்கு. நாட்கள் செல்லச் செல்ல சாவும் சமீபிக்கிறது. உனதென்று உரிமைபாராட்டிய எல்லாவற்றையும் உதறி உலகில் இருந்து நீ சென்று விடுகிறாய். கடவுள் நினைவிலே வாழும் வாழ்க்கை இன்பமும் சாந்தியும் கொண்டது. இதுவல்லாத வாழ்வு பயங்கரமான இறப்பிற்கு உன்னை இறுதியில் இழுத்துச் செல்லும் நீண்ட துயர் விலங்கு.

நித்திய இன்பத்தை அனுபவித்தலே மனித வாழ்வின் நோக்கம். கவலை, கிலேசம், அச்சம், ஐயங்கட்கு வாழ்வை இருப்பிடமாக்கின் கடவுளருளிய அருமையான மதிப்பிலாஇவ்வாழ்வை வீணாக்கியதாகும். வாடும் மாலைகளிலும் உலகப் பொருள்களிலும் மனிதன் பெருமை தங்கிஇருக்கவில்லை. நித்தியப்பெருமைக்கும், இறப்பிலா இன்பத்திற்கும், நித்திய வாழ்விற்கும் மனிதன் மனிதனிலிருந்து உயரலாம்.

உள்ளிருக்கும் இறைவனின் இன்பத்தையும் சாந்தியையும் அடைவதே மனித வாழ்வின் நோக்கம். தன்னுள் இருக்கும் அழிவிலா இன்பத்தை அடைந்த அன்றே மனிதனின் இன்பப்பசி ஆறும். மனிதவாழ்வு கடவுளின் பேருபகாரமே. அதை மனத்தின் சங்கற்ப சிந்தனை எல்லைக்குமேலே உயர்த்து. ஓயாது மாறுபடும் உலக வாழ்வின் நிபந்தனைக்குள்ளான பந்தங்களுக்கு அப்பால் எழுப்பி என்றுஞ் சுதந்திரமான நித்தியானந்தமான என்றுமுள்ள உண்மைப் பொருளான அதனையே அறியமுயல்.

எல்லாவற்றின் வேட்டும் உள்ளேயுமான ஒன்றேடுபரிபூரணமாய் ஒன்றிக்கவே ஆன்மாமேல் நோக்கிப் பறக்கிறது. வாழ்வாறு சகலநிலைகளையும் தடைகளையும் தாண்டிக்கொண்டு கடவுளுடன் கலக்கமுயற்சிக்கிறது. இறப்பிலாச்சமுத்திரத்தில் கலந்து அந்தமிலாக்காட்சியில் ஆனந்திக்கும் வரை அதற்கு ஆறுதலில்லை சுதந்தரமில்லை அமைதியில்லை.

தொடரும்

# பாரதசக்தி

(சுத்தானந்ததாசன்)

தமிழன் தவஞ்செய்தானா? ஆம் செய்தான். அதற்குச் சந்தேகம் எதுவுமே வேண்டாம். தமிழனின் தவமே உருவாக உதித்தவர் யோகி ஸ்ரீ சுத்தானந்த பாரதியார் அவர்கள். இரண்டாயிரம் ஆண்டுகளுக்குமுன்னே உள்ள தமிழர்களின் தவத்தால் பிறந்தவர் வள்ளுவர். உலகம் தோன்றியநாள்தொட்டு இன்றுவரை உள்ள தமிழனின் தவத்தாலும் இனிமேல் வரும் தமிழன் செய்யும் தவத்தாலும் பிறந்தவர் சுவாமி சுத்தானந்த பாரதியார் அவர்கள்.

என்னுடைய வாழ்வில் தமிழ் இனிக்கும் என்னும் அனுபவத்தை உண்டாக்கியவர் அவரே. அவர் உருவை இன்றல்ல, மணிக்கணக்கல்ல, வருடக்கணக்காகத் தியானித்திருந்தாலும் மனதில் அலுப்புத்தட்டுவதில்லை. அவர் உருவை மனதில் இருத்துவோருக்கு முருகன் திருவருட்காட்சியே கிடைக்கும்.

இன்று தமிழ்நாட்டில் சுவாமிகளை முருக உபாசகர்கள் முருகனாகக் காண்கிறார்கள். சக்தி உபாசகர்கள் சக்தியாகக் காண்கிறார்கள். கலை உபாசகர்கள் கலையாகக் காண்கிறார்கள். இவ்வார்த்தைகள் எல்லாம் சுவாமிகள்மேற்கொண்ட அன்பினால் எழுந்த புகழுரைகள் என்று வாசகர்கள் கருதவேண்டாம். இன்றைய உலகில் தூல உடல்கொண்டு வாழும் மகான்களின் கருத்தும் இதுவே.

அவர் வாழ்வுக்கு இலக்கணம் யோகசித்தி அதன் இலக்கியம் பாரதசக்தி மகாகாவியம்.

"தானும் நிறைவுற்றுத் தன்னவரும் இன்புறுதற்
கான ஒழுக்காறே அறம்"

என்கிறார் யோகசித்தியில். அறம் என்றால்என்ன என்பதைப்பற்றி இதுவரை இவ்வளவு தெளிவாகக் கூறியவர் எவருமிலர். குருடன் குருடனுக்கு வழிகாட்ட முடியுமா? இன்று உலகில் எல்லோரும் உபதேசம் செய்கிறார்கள். அவ்வுபதேசப்படி நடப்பவர் யாருமிலர். ஆயிரம் பேருடைய உபதேசத்திலும் பார்க்க ஒருவருடைய செய்கையே உலக உள்ளமெல்லாம் நிறைகிறது. சுவாமியவர்கள் தாம்

நிறைந்தார். அவர் இப்பிறப்பில் நிறைந்தவரல்லர் பிறக்கும் பொழுதே நிறைந்து பிறந்தவர். ஐந்து வயதினிலே அம்பிகையின் ட்சிமுன் சென்றார். வேசற்று வீழ்ந்தார். பின்வருங்கவிமலர் பூத்தது.

"அம்மா பரதேவி தயாபரியே
சும்மா உலகின் சுமையாக இரேன்
எம்மாத் திருமுன் பணியிங்குளதோ
அம்மாத் திரம் வைத் தடிசேர்த் தருளாய்"

பகவானிடம் இதைப்பிரார்த்தனை செய்வதற்கே மனிதனுக்கு எத்தனை பிறவிகளிற் செய்த தவம் வேண்டும். தவம் பெற்ற தவம் ஆனபடியால் ஐந்து வயதிலே இந்தச்சித்தி கிடைத்துவிட்டது. தான் நிறைந்தார். அந்நிறைவைத்தன்னவர் இன்புறப் பாரதசக்தியாக எழுதிவைத்தார். அதைப்படித்துப்பயன் பெறுக தமிழர்.

சுவாமிகளின் ஆயுட்காவியம் பாரதசக்தி மகாகாவியம். பாரத சக்தி கவிக்குக்கவி; கலைக்குக்கலை; வாழ்விற்கு வழிகாட்டும் சாதன வேதம்; புதிய உலகில் புதிய பூரணவாழ்வைத்தரும் அமரானந்த ஊற்று; இனிய எளிய ஆவேச நடையில் வரிக்குவரி தெய்வச் சுவை நிரம்பிய கலைக்கோயில்; இதுவே உலகின் உள்ளம்; மனித சமுதாயத்தின் உண்மை வரலாறு; மனிதான்மாவின் தெய்வ விளக்கம்.

சுவாமிகள் தமது வாழ்வையே யோகக்கனலில் உருக்கி வார்த்து பாரதசக்தியாக உலகத்திற்கு அளித்திருக்கிறார். பாரத சக்தியை வாசிக்குந்தோறும் சுவாமிகளின் திருவுருவமே உள்ளத்தில் முன்னிற்கிறது. அவர் வாழ்வை நினைந்து இதயம் நெக்குருகின்றது. ஆசை ஆணவ அசுரர்கள் மாய்ந்து போய் தற்போத மிழக்கின்றது. சில நூல்களைக் கற்றால் நான் படித்தவன் என்ற மமதை உண்டாகிறது. பாரத சக்தியைப் படிக்கப்படிக்க "நான்" "எனது" என்பதற்று ஆனந்தம் பொங்கிப் பெருகுகின்றது. சில இடங்களில் எத்தனையோ ஆண்டுகள் செய்து அடையமுடியாத சாதனை சில நிமிஷங்களில் கை கூடிவிடுகின்றது.

பகவான் ரமணமகர்ஷிகள் சொல்லுகின்றார்கள் "நான்யார்" என ஒவ்வொருவனும் விசாரிக்கவேண்டும். அவ்விசாரத்திற்கு



அவனே விடை கண்டு பிடிப்பான். இவ்விசார மார்க்கத்தில் சோம்பல் ஏற்படும் போதெல்லாம் ஓய்வு நேர உபயோகத்தில் பாரதசக்தி சாதகர்களுக்கு அருமருந்தாகிறது.

நீருள் மூழ்கியவன் வெளியே வந்து மூச்சுவாங்குவதற்கு எவ்வளவு தவிப்புக்கொள்வானோ அத்தகைய தவிப்பு ஒன்று சுவாமிகளுக்கு வாழ்வில் ஏற்பட்டது. அத்தவிப்பைச் சுவாமிகளுக்கு இல்லாமற் செய்தவர் பகவான் ரமணமகர்ஷிகளாவர் சுவாமிகள் பகவானைச் சந்தித்த முதற் சந்திப்பில் பகவான்

"பாரதியா? பாரதசக்தி எழுதியிருக்கிறார்"
என்றே சுவாமிகளை வரவேற்றார்.

வீரக்கலை விளக்கு வ. வே. சு. ஐயர் அவர்கள் கூறுவதைக் கவனிப்போம்.

"ஸ்ரீ சுத்தானந்த பாரதியார் அவர்கள் ரிஷிவாழ்வு வாழும் ஓர் அற்புதமான வரகவி; கவியோகி! அவர் வாக்கு தவத்தினால் பழுத்துக் கனிந்ததென்றே சொல்லவேண்டும். உலகமகா காவியங்களையும் வீரர் வரலாறுகளையும் பல நாட்டுச் சரித்திரங்களையும் இவர் கருத்துடன் படிக்கிறார். சிறு வயது முதலே இவருக்குக் கவிதா சக்தி வளர்ந்து வந்திருக்கிறது. முற்கால மகா கவிகள் இராமாயணம் பாரதம், பாகவதம், இலியாது போன்ற பெரிய காவியங்களை எப்படிச்செய்தார்கள் என்பதை நாம் சுத்தானந்தர் வாழ்வினின்று தெரிந்துகொள்ள முடிகிறது.

அவர் நூல்களிலெல்லாம் மிகவும் சிரேஷ்டமானதும் அமரத்தன்மை பெற்றதும் இந்தப்பாரதசக்தியே. இது மகா காவிய நடையில் எழுதப்பெற்ற அற்புதமான இலக்கியரசனை; தமிழுக்குப் பொன்றாப் புகழைத் தருவது. தமிழில் பல நூற்றாண்டுகளுக்குப் பிறகு எழுந்த முதல் நூல்; உத்தம காவியம் என்றே இந்தப்பாரத மகா சக்தி காவியத்தைச் சொல்ல வேண்டும்.

ஓம் மாதா மயம் ஜெகத்.

# அமைதி.

[சாது முருகதாஸ்]

அம்மா அருள்வாய் அமைதி அமைதி
அமைதி ஒன்றே அழியாச் செல்வம்.

பராசக்தி! உலகில் மனிதன் மனிதனாகவும் தேவனாகவும் வாழ அவனை எப்பொழுதும் உன் அடிபரவும் பாலனாகவே வைத்துக்கொள். உலகில் அவனுக்கு சுதந்திரம் கொடு பிறர் அவனை அடுத்தால் பூரணமான உதவி செய்யும் தன்மையையும் இளகிய உள்ளத்தையும் கொடு அடிமையென்ற விலங்கு அவனை பந்தப்படுத்தாதவாறு அவனுக்கு எப்பொழுதும் துணையாக இரு.

தாயே! சுதந்திரம் என்பதைப் பெற்றதும் பதவி மோகம் கர்வம் பொறாமை இழிவுபடுத்தல் சுயநலம் ஆகியவைகளுக்கு அவன் அடிமையாகிவிடாமல் பொதுவாக நின்ற உண்மயமாக உலகைக் கருதி சேவைசெய்ய மன உறுதியைக்கொடு.

அம்மா! மனிதன் உலகத்தில் சுதந்திரனாகவும் தர்மம் சத்தியம் அஹிம்சை சேவை தியாகம் அன்பு சமத்வம் திருப்தி ஆகியவைகளுக்கு அவனை எப்பொழுதும் அடங்கி நடக்கும் அடிமையாக நீ செய்தாகவேண்டும். இதுதான் அவனுக்கும் அவனைச் சுற்றியுள்ள உலகுக்கும் இன்பந்தரும். உடல் கொண்டயாரும் சுதந்திரராக வாழமுடியாது உலக அடிமையினின்றும் நீங்கியவன் தன்னைத் தர்மாதிகட்கு அடிமையாக்கிக்கொண்டேயாகவேண்டும். இல்லையேல் எவ்வளவு பெரிய தியாகியானாலும் தீரனானாலும் அவனை ஆசை சுயநலம் பொறாமை பொய் பரநிந்தனை பிறர் பொருள் யான் எனது என்றவைகள் அடிமைகொண்டு அவனையும் உலகையும் அழிவை நோக்கியிழுத்துச் செல்லும். பராசக்தி மனிதனுக்கு நல்லபுத்தி கொடு.

கருணையம்மா! மனிதனை உலகில் சுதந்திரனாக்கு ஆனால் அவனை அன்பினால் கட்டி கருணையுடன் அவனை பிணைத்து நீ உன்னடிமையாக அவனைக் கொண்டு எப்பொழுதும்



உன் கருவியாக வைத்திரு. இவ்வரத்தை உடனே உலக அமைதியைக் கோரிக் கொடு.

அன்புருவே தாயே நீ படைத்த உலகில் வேற்றுமைகளை ஏன் அனுமதிக்கிறாய்? வீண் கர்வம் ஆணவம் சுயநலம் ஆகியவைகளை வேருடன் களைந்து இனிக்கொடுமைகள் தோன்றாதவாறு செய்து உலகை எல்லாம் அன்பர்களாக்கு. என்றும் வீண் எழுச்சியில்லாத பூரண சுதந்தர மக்களாக அனைவரும் வாழ்ந்து உன்னை நம்பி வையகமெல்லாம் இன்பவாழ்க்கை பெற ஏன்இன்னும் உன் அன்பு சக்தியை பூரணமாக உபயோகிக்கவில்லை? உடனே உன் அருட் சக்தி ஜெகமெங்கும் பரவ வா.

ஆதிசக்தியே! இன்று உலகில் உள்ள குழப்ப நிலைகளுக்கெல்லாம் சுயநலமும் நாட்டாசையும் மதத்து வேஷமுமேகாரணம். மற்றும் மனிதன் உன்னையும் உன் அருளின் ஆடலையும் உணரவில்லை. சில பாகத்தைப் பார்க்கும் போது மறந்தே விட்டான் என்று சொல்லலாம். அவன் தன்னையும் தன் அபார அறிவு சக்தி நீ தந்ததென்பதை மறந்து மற்றவர்களையும், கொள்கைகளையும் ஒழித்துவிடத் துள்ளுகிறான். தானே உலகை ஆள்வானும் அமைப்பானும் அழிப்பானும். என் இப்படி மனிதன் மிருகங்களும் தங்களுக்கு இவனை ஒப்பிடும் தன்மை குறித்து வருந்தித் தலை குனியும்படி கேவலவான நிலைமையை நோக்கிப்போகிறான். இவனை என்ன செய்ய, இவையனைத்தையும் பார்த்துக்கொண்டு கொடிய மௌனம் கொண்டுள்ளாய்? உலகை என்னிலையில் வைக்கப்போகிறாய்?

பராசக்தி! கொடுமையும் அராஜகமும் தலைவிரித்தாடுவது பொறுக்கமுடியவில்லை. அமைதி அமைதி என்று பலமுறை நித்தம் அலறும் எங்கள் குரல் கேட்டு ஏன் சும்மா யிருக்கிறாய். "இன்ப துன்பம் சமமானது உலகம்" என்று நீ சொல்லியுள்ளாய். அதற்கும் ஓர் அளவுண்டல்லவா? பராசக்தியே உன் அபார கருணையினால் தர்மாதிகள் வளர்த்து கூடிய சீக்கிரம் அமைதியை உண்டாக்கி எங்களைக் கண் குளிரக் காண வை.

வரதே! நாங்கள் வேண்டுவது, நல்ல தாயான நீ பல கோடி கொடிய பிள்ளைகளைப் பெற்றுவிட்டாய். அவர்களையும் நல் வழிப்படுத்தி சத்-சங்கர்களாக்க வேண்டும்.

உன் மயமாக உலகையும் ஜீவர்களையும் சராசரங்கள் அனைத்தையும் காண ஞானக்கண்ணை அன்புப் பார்வையை எல்லோர்க்கும் கொடுக்க வேண்டும்.

எல்லாவற்றையும் சேவை தியாகம் அன்பு சமத்துவம் என்ற நான்கையும் அடிவாரமாகக் கொண்டு மக்கள் பணி செய்ய வேண்டும்.

எளியார் பணக்காரர் உயர்வு தாழ்வு சாதிமதம் பலவான் அழகன் அழகி என்பவைகளை எல்லாம் கவனியாமல் எல்லாம் மாதா மயம் ஜெகத் என்றதை உணர்ந்து அதற்குத் தக்கவாறு நடந்து ஆனந்த வாழ்வை அனைவரும் நடத்த அருளவேண்டும்.

அமைதியாக அனைவரும் தம்முள் உள்ள ஆத்ம ஜோதியான உன்னைக் கண்டு ஆனந்தக் கூத்தாட வேண்டும். எங்கள் வேண்டுதல்களை நீ தரவேண்டும்.

ஆதி சக்தியே! இவ்வளவு தூரம் வரம் வேண்டுவது எங்களுக்காக அல்ல. எங்களையும் நீ உலகத்தில் வாழும்படி வைத்தமையாலும் எங்களுக்கு உலகம் எல்லாம் நடப்பது உன்னால் என்ற உணர்ச்சியையும் கொடுத்திருப்பதால், உலகத்துக்குவெறும் சுமையாக வாழாமல் உன்னருளால் உலகுக்கு பூரண அமைதி கிடைக்க வேண்டியிருப்பதால் உன்னைத் தாழ்மையுடன் எல்லாவரங்களையும் உலகுக்கு அருள வேண்டும் என்று வற்புறுத்துகிறோம்.

அம்மா! நீ நாங்கள் கேட்டவரம் தாமல் மேலும் அமைதியற்ற நிலைமையை நோக்கி உலகை மக்கள் போகப்பார்க்க உள்ளங்கொண்டால் அதைத்தடுக்க சக்தியற்ற நிலையில் மறுபடி கடைசியாக ஓர் வரம் வேண்டுவோம். அமைதியற்ற நிலையும் கொடுமைகளையும் காண நாங்கள் விரும்பவில்லை. பெரும் அளவில் இன்னலை மக்கள் பெறும்முன் எங்கள் வேண்டுகோள் ஈடேறாத நிலையில் எவ்வளவு சீக்கிரம் இவைகளைப்பாராமல் உன்னுடைய மலர்த்தாளில் எங்களைச் சேர்த்துக்கொண்டுவிடு. இது உன் அருள் நிலையை அறியாமையால் கேட்கும் வரம். அம்மா நீ கருணாமூர்த்திமுன் கேட்ட வரமனைத்தும் தந்து உலகைக் கார்க்க வா. தாயே வா.

# அவதாரபுருஷர்களது ஜீவிய சரிதைகள் ஆத்மஞானத்துக்கேற்ற கலங்கரை விளக்கங்களாம்.

( ஸ்ரீ சர்க்கராம்பாள் ராகவாச்சாரி )

நமக்கு இயற்கையிலேற்படும் ஆசாபாசங்களை வென்று, ஆத்மாவின் சொரூபத்தை யறிந்து முத்தி பெறு மார்க்கத்தை நாடி நடப்பதற்கு இல்லறவாழ்க்கை உயரிய சாதனமெனக் கண்டோம். உலகத்தை சாஸ்திரீயமான நல் வழியில் நடத்தி ஜீவன்களையும் உய்விக்குமாறு சர்வேஸ்வரன் அவதாரங்களெடுத்துப்பூமியில் மனிதராய்ப்பிறந்து இல்லற தர்மங்களை மேற்கொண்டு வழிகாட்டியருள்கிறார் என்பதே அவதாரங்களின் முக்கிய நோக்கம். ராமாவதாரம் கிருஷ்ணாவதாரம் இவ்விரண்டுமே அவதாரங்களில் வெகு சிலாக்கியமானவை. மனிதர்களது வாழ்க்கைக்கு நற்பயனளித்து மாந்தரை நல்வழிப்படுத்தி முத்தியடைவிக்க வல்லவை.

---

முற்பக்கத்தொடர்ச்சி

ஏ பராசக்தி! ஏகருணையே! இயற்கைக்கு அப்பாலுள்ள ஒன்றே! முத்தமிழ் அமுதே! சக்தியே! முத்தியே! சித்திகள் கடந்த நிதியே! பதியே! ஆதியே! ஜோதியே. பக்தியற்றாராயினும் பதம் அருளும் பண்பே! தித்திக்கும் அமுதே! அன்னையே! அன்புக்கு அடிமைபாக, அகங்காராதி கொடுமைகளினின்று விடுபட்ட சுதந்திரராக எங்களுக்கு அருள் தா. ஆத்மஜோதி! எங்கும் உன்மணம் கமழுக. வாழ்க உன்னுடல் அருட்தன்மை. எல்லோர்க்கும் அன்புச்சோதியருள். வா பராசக்தி.

அசத்தெல்லாம் சத்தாக
அக்கியான இருள் ஞான ஒளியாக
அழிவுசக்தி அமுதமாக
ஆதிசக்தி அருள்வாய் அமைதி
அமைதி அமைதி.

ஸ்ரீ ராமபிரான் தாய், தகப்பன், தம்பிமார், பார்யை முதலிய உற்றத்தாரோடு சாஸ்திரமுறைப்படி குடும்ப நிர்வாகத்தைச் செய்து காட்டி, சகல தர்மங்களையும் அனுஷ்டானத்தில் நிரூபித்ததன் காரணமாக ராமாயணக்கதையையே ஓர் சிறந்த வேதமாக நாமனைவரும் கருதுகிறோம். கிருஷ்ணவதாரமும் துஷ்டநிக்ரக சிஷ்டபரிபாலனத்திற்காகவே எடுக்கப்பட்டதெனச் சாதாரணமாக நாமெல்லோரும் சொல்லக்கேட்டும் படித்துமிருக்கிறோம். ஆயினும் அந்த அவதாரபுருஷனது லீலைகளினின்றும், கவுரவ பாண்டவ யுத்தசமயத்தில் பார்த்தனுக்குச் சாரத்தியம் புரிந்தவண்ணம் உபதேசம் செய்த ஆச்சரியமான கீதையினின்றும் அவதாரத்தின் முக்கிய நோக்கமும் பெருமையும் விளங்குகிறது.

இராமாயணம் மகாபாரதம் (பகவத்கீதை யிதனுள்ளடங்கிய தன்றோ) இவ்விரு மகா காவியங்களும் நமது ஆத்மாவின் உண்மையான நிலையையறிந்து கொள்வதற்கான விசேஷ தரும சாஸனங்களை விவரித்துக் காட்டுவதோடு, தெய்வபக்தி, மாத்ருபக்தி, பித்ரு பக்தி, ஆசாரியபக்தி, சத்தியம், பொறுமை, ஜீவகாருண்யம் சகோதர வாஞ்சை, பதிவிரதா தருமத்தின் மகிமை உண்மையான சிநேகத்தின் சீலம், அதிதி பூசை, செய்நன்றி மறவாமை முதலிய இல்லற தரும நெறிமுறைகளும் அன்பு, தயை, நடுவுநிலைமை, சரணாகதியின் புண்ணியம், முதலிய உத்தமகுணங்களும் நன்கு விளங்கப்பெற்றுப் பிரகாசிக்கின்றன. இவ்விரு மாபெருங் காவியங்களையும் மட்டில் நமது சகோதரிகளும், பெண்மக்களும் நன்றாகப் படித்து அந்நீதி மார்க்கங்களையனுஷ்டித்தால் வேறு எவ்விதக் கலாசாலைப்படிப்பும் தேவையில்லை என்று என் சொந்த அனுபவத்திலிருந்து நிச்சயமாகச் சொல்லுகிறேன். இவை மட்டுமல்லாமல் நமது சமய குருக்களும், தமிழ்ப்புலவர்களும்எழுதிவைத்துள்ள அறநெறி நூல்களையும்படித்தலவசியம். சமய குரவர்கள் அனைவரும அநேகமாகபகவத்கீதை, இராமாயணம் முதலிய நூல்களிலுள்ள இரகசியார்த்தங்களையே கையாண்டு தத்தம் சமய நூல்களை இயற்றியுள்ளனர். முக்கியமாக வைஷ்ணவ ஆழ்வார்கள் பாடியுள்ள பிரபந்தங்களில் இது விசேஷமாகக் காணப்படும். தெய்வப்புலமை திருவள்ளுவரது திருக்குறளில் அர்த்தப்புஷ்டி நிரம்பி, சுருக்கமானவும் செம்பாகமானவுமான ஈரடிச் செய்யுள்கள் ஒவ்வொன்றும் நமது வாழ்க்கையில் நடத்த வேண்டிய



நெறிமுறைகளையே குறிப்பனவாம்.

"யாதனின் யாதனின் நீங்கியான் நோதல்
அதனின் அதனின் இலன்

தன் எண்ணத்தினின்று எழும் விருப்பங்களனைத்தையும், மனத்தாலேயே துறந்து இந்திரியங்களை மனத்தாலேயே அடக்கி மனத்துணிவுடன் மெள்ள மெள்ள ஓய்வு பெறவேண்டும். மனத்தை ஆத்மாவிடத்திலேயே செலுத்தி நிலையுறச்செய்து வேறெதையும் சிந்திக்காமலிருக்க வேண்டுமென்று ஸ்ரீ கிருஷ்ணபகவான் ஆத்ம சம்யம யோகத்தில் உபதேசித்ததன் கருத்தை வள்ளுவர் மேற்கூறிய இரண்டடியில் புகுத்தியுள்ளார்.

"தானே தனக்குப் பகைவனும் நட்டானும்
தானே தனக்கு மறுமையும்—இம்மையும்
தானே தான்செய்த வினைப்பயன் துய்த்தலால்
தானே தனக்குக் கரி."

என்ற அறநெறிச் சாரப்பாட்டும் கீதையின் தத்துவத்தையே மேற்கொண்டது. இன்றும் உலகத்தில் பிறப்பு இறப்பு, இம்மை, மறுமை இவைகளைப்பற்றி கிருஷ்ணபரமாத்மா விஞ்ஞானயோகத்தில் எடுத்துக்காட்டிய உண்மையே, திருச்சந்த விருத்தத்தில் திருமழிசையாழ்வார்;—

"தன்னுளே திரைத்தெழுந்தாங்கவெண் தடங்கடல்
தன்னுளே திரைத்தெழுந்தடங்குகின்றதன்மைபோல்
நின்னுளேபிறந்திறந்துநிற்பவும்திரிபவும்
நின்னுளேயடங்குகின்றநீர்மைநின்கண்நின்றதே"

என்ற பாட்டில் பொதியவைத்துள்ளார்.

"உலகம்யாவையுந்தாமுளவாக்கலும்
நிலைபெறுத்தலும்நீங்கலும் நீங்கலா
அலகிலாவிளையாட்டுடையாரவர்
தலைவரன்னவர்க்கேசரணங்களே"

என்ற கம்பநாட்டாழ்வாரது செய்யுளிலும் சகத்தின் பிறப்பிறப்பு குறிக்கப்பட்டுள்ளது.

'பிறப்பென்னும் பேதமை நீங்கச் சிறப்பென்னும்
செம்பொருள் காண்பதறிவு"

என்னும் குறளும் அதற்குப் பரிமேலகழர் எழுதிவைத்துள்ள உரையும் கவனிக்கவேண்டியவை. ஈசுவர பக்தி நிரம்பிய பலபெரி

# ஷெல்லியும் சுத்தானந்தரும்.

(வி, ஆர், எம். செட்டியார்)

எதையும் கவிதையென்று எண்ணுவது தவறு. கவிதையில் உண்மையுண்டா, கற்பனை ஒளியுண்டா, உணர்ச்சியுண்டா, மொழிஜாலம் உண்டா, உவமையணியுண்டா, தளைசீர் மோனைக்கு அடிமையின்றி காவிய விண்ணிற் பறக்கும் ஆற்றலுடையதா? இவைபோன்ற கேள்விகளே இரஸிகர்களின் ஆராய்ச்சித்தத்துவம் நிறைந்த கேள்விகள்.

ஆங்கிலக் கவி ஷெல்லியும் (Shelley) சுத்தானந்தபாரதியாரவர்களும் உண்மைக்கவிதையை நன்கு உணர்ந்தவர்கள்; அருளுடன் பாடிப் பாடி, ஆராய்ச்சித்தராசிலும் நிலைத்து நிற்கும் பேராற்றலுடையவர்கள். பாடுவதென்றால், வாய்க்கு வந்தபடியெல்லாம் கவிதையல்ல. சிலர் இஷ்டம்போல, சொற்களை அடுக்கியடுக்கிப் பார்த்துப் பாட்டுக்கட்டுகிறார்கள்; அருளாவேசமின்றி இப்படிச் செய்யப்படும் செய்யுள், இலக்கணவரம்பிற்குள் அறிவின்றிப் புலம்பிக்கொண்டிருந்தாலும், உண்மைக்கவிதையின் எல்லையில் நுழை

---

முற்பக்கத்தொடர்ச்சி

யோர்க்குமே மரண காலத்தில் மனதைப்பிரமனிடம் பதிய வைத்தல் கடினமான காரியம். மகாத்மாவான ஜடபரதரே உயிர்மரிக்கும் போது ஒரு மான்மேல் மனதைச்செலுத்தி மறுபிறப்பில் மானாகப் பிறந்தகதை பலருக்கும் தெரிந்ததே. அப்படி மனம் சஞ்சலிக்காமல் இறைவனிடம் இறக்கும்பொழுதுகூட நிலைத்து நிற்க ஈசனை வேண்டிக்கொள்ளுதல் அவசியம். பெரியாழ்வார் திருமொழியிலும் இதற்கு ஆதாரம்:—

துப்புடையாரை யடைவதெல்லாம் சோர்விடத்துத்
  துணையாவரென்றே
ஒப்பிலேனாகிலும் நின்னடைந்தேன் ஆனைக்கு நீ
  யருள் செய்தமையால்
எய்ப்பென்னைவந்து நலியும் போது அங்கேது
  நானுன்னை நினைக்கமாட்டேன்
அப்போதைக்கிப்போதே சொல்லி வைத்தேன்
  அரங்கத்தரவணைப் பள்ளியானே.



யவே முடியாது. கள்ள நாணயங்கள் போல, போலிப்பாட்டுகள் ஒலிக்குறைவாலும், உண்மைக்குறைவாலும் தங்கள் போலி நிலையைக் காட்டிக்கொண்டே நிற்கும். உண்மைக் கவிதையில் வாழ்க்கைச் சித்திரம் தவழ்ந்து மின்னிவட்டமிடும். அது ஒரு கற்பனைக் களஞ்சியம்; உணர்ச்சிக்கடல்; இசை அருவி; சொற்களின் இன்பத் திருவிளையாடல்; கேட்போர் காதைக்கொஞ்சி முத்தமிடும்

உண்மைக் கவியின் உண்மைத் தத்துவத்தை· உடலிலும் உயிரிலும் கலந்து பருகியவர்கள் ஷெல்லியும் சுத்தானந்தரும், ஷெல்லியின் வானம்பாடி (Sky Lark) இசைவிண்ணிலே சிறகடித்துப் பறக்கிறது; ஒரு கவிஞனின் உள்ளத்தையே பிரதிபலிக்கிறது; கலையுள்ளம் நிறைந்த இசைப்பறவை, உடற்சுமை மறந்து, கவலை மறந்து. கலை நிறைந்து, இசைநிறைந்து நிலவைப் பருகி, காதல்கீதத்தையும் இறுமாப்புடன் இன்பமாய் அருந்தியருந்திப் பித்துப்பிடித்த நிலையில் ஆகாசத்தின் அகண்ட வெளியையே முற்றுகையிடுகிறது. வானம்பாடியின் இசைமழை, உச்சியிலிருந்து புயலாகவே வழிந்தோடுகிறது. மனிதன் கவலைமண்டிய நிலையில், கலையின் ஜோதியையே மறந்துவிடுகிறான்.... .....

இனி நாம் சுவாமி சுத்தானந்த பாரதியாரின் கவிதா ரீதியைக் கவனிப்போம். சுடச்சுடப்பொங்கி வழிந்தோடுகிறது தமிழ்மொழி சுவாமிஜியும் அருட் பிரவாக நடையில் தனது கவிதையைச்சிருஷ்டித்திருக்கிறார்கள்; அவர்கள் எழுதும் சன்னத நடையில், கலை வெள்ளம், ஞானவெள்ளம், உண்மையின் அகண்ட ஒளி, இன்பநாத இசை, கற்பனையின் தங்கக்கொடி, அன்பின் வெண்ணிறம், கல்வியின் ஒலிச்சித்திரம், சுதந்திரப்பேரிகை, ஈசன் சந்நிதி, எல்லாம் கலந்து தமிழ்மொழியை இதயச்சிகரமாகவே மாற்றிவிடுகின்றன. இதயக் கண்ணாடியில், மொழியின்மையல், திருவிளையாடலாக உதயமாகவே காண்கிறோம்; இதயத்துடிப்புகள், அறிவின் அகண்டரேகையாகவே மொழியின் இதயத்தில் ஒளி வீசுகின்றன. இதயம் குதித்துக் குதித்துப்பறந்தால், சொற்களும் இசையலைகளாகவே குந்துபோட்டுவருகின்றன. சுவாமிகளின் "தமிழ்க்கனல்" மொழிக்கனல்; 'தலை நிமிர் தமிழா' என்ற பாட்டை, இதய பூகம்பமாகவே பாடிப்பாடிப் பாருங்கள்,

# திருக்கேதீஸ்வர ஆலயத் திருப்பணிச்சபை

இச்சபையின் பொதுக்கூட்டமொன்று நிகழும் பங்குனி மாசம் 14 ம்உ (27-3-49) ஞாயிற்றுக்கிழமை மாலை வெள்ளவத்தை சைவ மங்கையர் கழக வித்தியாசாலையில், திருவாளர். K. வைத்தியநாதன் அவர்களின் தலைமையில் கூடியது,

அன்று நிறைவேறிய தீர்மானங்களுள் ஒன்றின்படி இலங்கை வாழ் இந்துக்கள் ஒவ்வொருவரும் தமது ஒரு மாசவருமானத்தை இந்தத் திருப்பணிக்காக மூன்று வருஷ எல்லைக்குள் மாசம் மாசம் சிறுதொகையாகக் கொடுத்து உதவவேண்டுமெனக் கேட்கப்பட்டுள்ளனர். இந்தவிதமான தியாகமுறையில் தான் இப்பெருஞ் சிவத்தொண்டு சீக்கிரம் நிறைவேற முடியுமென்றஉண்மை பலரால் நன்கு விளக்கப்பட்டது. அத்தருணம் கீழ்க்கண்ட தொகைகள் வாக்களிக்கப்பட்டன:—

| | | ரூ ச |
|---|---|---|
| 1. | திரு. K வைத்தியநாதனவர்களும் அவர்பாரியாரும் | 1001-00 |
| 2. | ,, C. தியாகலிங்கமவர்களும் அவர்பாரியாரும் | 1001-00 |
| 3 | ,, S. சிவசுப்பிரமணியமவர்களும் அவர்பாரியாரும் | 1001-00 |
| 4 | ,, K மதியாபரணமவர்களும் அவர்பாரியாரும் | 1001-00 |
| 5. | ,, P. C. கதிரவேலு அவர்களும் அவர்பாரியாரும் | 1001-00 |
| 6. | ., மதராஸ் பழையகாட் கம்பனி | 1001-00 |

[இந்தத்திருப்பணி நிதிக்குப்பணம் உதவுவோர்களின் பெயர்களும் தொகையும் ஒழுங்காக 'ஆத்மஜோதி' யில் இனி மேலும் வெளிவரும்]

## திருத்தாண்டகம்

விண்ணோரும் விளங்கரிய விமலன் றன்னை
வெற்றிவேல் முருகனையன் றளித்த நெற்றிக்
கண்ணனைக் கௌரிமகிழ் கணவன் றன்னைக்
கடல்சூழ்ந்த கவின்நகராய் விளங்கிப் பின்னால்
மண்ணோடு மண்ணான மாதோட்டத்தில்
மறைந்திருந்த தேன்பொந்தை மா மருந்தைக்
கண்ணாரக் கண்டுகவல் நீங்குங் காலங்
கைகூடி விட்டதெனக் களி கொள்வீரே.

—க. இ.

# THE FLAME.

Mount, O Flame, above our front;
I ight there the Lemp of Truth!
Grant us the strength to vanquish gloom,
Bright victorious Flame!
Lead us to the Heaven within
O I ove that is Power!
Fulfil our life in the Divine
Thou art the way and Thou the Guide!

11

I et our fervour kindle Thee
O Flame of Divinitv!
With the rapture of Thy splendour
Dance in our hearts, O mounting Flame!
Transform our bodv, life and mind
Into a fover of supreme Bliss!
Darting high Thv arrowed tongues
Swell celestial Effulgence!

Ascend, O graceful concious Flame,
With the hvmnal word of Truth!
Set white ablaze the glowing Spirit,
We offer Thee the mind as food.
Eat all our thoughts, O Fire!
open the door of God-knowledge
Give us the wealth of Light.
Open our eyes to see the One
That lives in as and moves our life.
Pour into us, O Cosmic Force;
Hail! Gracious Mother,
Perfect our love, Perfect our life,
Perfect our mind, perfect our soul!
Om Shakti! OmShakti!!

Shuddhananda Bharati

Registered in the G. P. O. as a News Paper.

# சாதனுவாரம்.

புது ஆண்டுப்பிறப்பன்று இலங்கையில் முதன் முதலாக திருக்கேதீஸ்வர ஸ்தலத்தில் கோயில் கொண்டிருக்கும் கௌரியம்மன் சந்நிதானத்திலேயே சாதனுவாரம் கூடத்திருவருள் பாலித்திருப்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகிறோம்.

இடவசதியின்மையால் தாய்மார் சாதனுவாரத்தில் பங்கு பெறும் விஷயம் தவிர்க்கப்பட்டிருக்கிறது.

13-4-49 புதன்கிழமையன்று சாதனை ஆரம்பமாகி 18-4-49 திங்கட்கிழமை இரவு 9 மணியளவில் முடிவாகும். இச்சிறந்த தொண்டில் பங்கெடுக்க சாது ஸ்ரீமுருகதாசர் பாலயோகி ஸ்ரீராமதாசர் பிரசங்க சாகரம் ராமசாமி சாஸ்திரிகள் முதலியோர்கள் சமுகமளிப்பர்.

நிகழ்ச்சிகள்.

13-4-49——18-4-49

| | | |
|---|---|---|
| காலை | 5-00—5-30 | யோகாப்பியாசம். |
| ,, | 6-30—8-00 | பஜனை, தோத்திரம், தியானம். |
| ,, | 8-00—9-00 | காலைப்போஜனம். |
| ,, | 9-00—11-30 | புராணபடனம், சமயபாடம், சம்பாஷணை. |
| ,, | 11-30மாலை4-00 | போசனம், இளைப்பாறல். |
| மாலை | 4-00 ,, 5-00 | பெரியார் வரலாறுகள். |
| ,, | 5-00 ,, 5-45 | உபந்நியாசம். |
| ,, | 6-00 ,, 8-00 | மாலைபஜனை, தோத்திரம், தியானம். |

---

## யோகி சுத்தானந்த பாரதியார் இயற்றியது.

1 நாவலர் பெருமான் 3-00
2 யோகசித்தி (மூலமும் உரையும்) 3-00
3 பாரதசக்தி மகாகாவியம் [5 காண்டங்களுடன்] 15-00

புதுயுக நிலையம்—புதுச்சேரி,

இப்புஸ்தகங்கள் குறிப்பிட்டுள்ள விலைக்கே 'ஓம்கார நூலகம் புதுக்கோட்டையிலும் பெற்றுக்கொள்ளலாம்.

---

'அருட்செல்வம்' (அச்சில்) 2-00

விபரத்திற்கு கீழ்க்காணும் விலாசத்திற்கு எழுதவும்

அ. செல்லத்துரை, அரசினர் தமிழ்ப்பாடசாலை.
ருகலை, கல்கிறனேயா.

கௌரவ ஆசிரியர்: க. இராமச்சந்திரன்
பதிப்பாசிரியர்: கா. முத்தையா, ஆத்மஜோதி நிலையம், நாவலப்பிட்டி.
நாவலப்பிட்டி, 'சரவண' பிரஸில் பதிப்பித்தது. 13-4-49, 2000 பிரதிகள்.